சித்தர் நூல்கள்

பட்டினத்தார்

அருளிய

ஞானம் - 100

காப்பு

நேரிசை வெண்பா

நண்பான நெஞ்சுக்கே ஞானத்தால் நல்லபுத்தி
வெண்பாவாய் நூறும் விளம்பவே - பண்பாக
ககனமறி பதமுருவக் ககனமுட கதிர்வறுக
ககனகதிர் வேல்முருகன் காப்பு.

நூல்

நெஞ்சுடனே தான்புலம்ப நீலநிறத்தாளீன்ற
குஞ்சரத்தை ஆதரித்துக் கும்பிட்டால் - கஞ்சமுடன்
காமமுதல் மும்மலத்தின் கட்டறுத்து ஞானமுடன்
பூமிதனில் வாழ்வாரெப் போதும். 1

எப்போ திறைவன் எழுத்தைவிட்டுத் தப்புவோம்
எப்போ யெழுத்தைரெண்டை ஏத்துவோம் - எப்போது
காமன்வலையறுப்போம் காரொளியைக் கண்டுநெஞ்சே
ஏமன்வலை அறுப்ப தென்று. 2

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

என்றும் பயமறவே ஈரெழுத்தும் ஓரெழுத்தாய்
நின்றசிவ லிங்கத்தை நெஞ்சேகள் - உண்டுறங்கித்
தேசமெல்லாம் நின்றசைந்த தீயெழுத்தே லிங்கங்காண்
ஆசைவிந்தே நாவெழுத்தே ஆவுடையார். 3

ஆவுடையா ளோடிருந்தேன் அருளானந் தம்பெறவே
கோவுடையார் நின்றதினம் கூடிய - பூவுடையாள்
கட்டழகி யைத்தள்ளி கடந்து பெருவெளியில்
இஷ்டமுடன் நெஞ்சேஇரு. 4

இருவினைக்கு உள்ளாகாதே என்னுடமைஎண்ணாதே
பெருகுசினங்கொண்டு பினத்தாதே - மருவுமலக்
கள்ளமெலாம் விட்டுக் கரைந்து கரைந்துருகி
உள்ளுணர்ந்து நெஞ்சேபார் ஒன்றை. 5

ஒன்றும் அறியாதே ஓடி அலையாதே
கருவியிற்சென்று மயங்கித் திரியாதே - நின்றநிலை
பிரியா தேநெடிய னெஞ்சே கொடிய
பலவினையும் மாத்துள் பொருள். 6

பொருளுடைமை நம்பாதே பொய்வாழ்வை நத்தாதே
இருளுறவை நம்பி இருக்காதே - பொருளுறவு
கொண்டறிவி னாலே குறித்து வெளியதனைக்
கண்டுபிடித் தேறுநெஞ்சே கரத்தை. 7

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

காத்துடனே சேர்ந்து கனலுருவைக் கண்டுவெளி
மாத்து இனிப்பிறக்க வாராதே - யேத்தபடி
ஓடி அலையாதே ஓங்காரத் துள்ளொளியை
நாடியிருப் போம்மனமே நாம். 8

நானென தென்னென்றுவினை நாடி அலையாதே
தானவனே யென்று தரிக்காய்நீ - என்மனமே
வீணாவல் கொள்ளாதே மேலாம் பழம்பொருளைக்
காணாவல் கொள்வாய் கருத்து. 9

கருத்து வேறாகாதே கண்டிடத்தில் ஓடாதே
விரித்துப் பலவேடம் மேவாதே - பெருத்ததொரு
சஞ்சலத்தை விட்டு சலமறிந்து காண்மனமே
அஞ்செழுத் தாலொன்ப தடை. 10

ஒன்பது வாய்க்கூட்டை உறுதிஎன்று நம்பாதே
ஐம்புல னேயென் றணுகாதே - இன்பமுடன்
சிற்பரத்தி னுள்ளே தெளிந்தபர மானந்தத்
துற்பொருளே மெய்யென் றுணர். 11

மெய்யுணர்ந்து பாராமல் விரிந்தகன்று போகாதே
அய்யன் திருவிளையாட்டென்றறி நெஞ்சே - செய்யதொரு
ஆணெழுத்தும் பெண்ணெழுத்து மணுவாகி நின்றநடு
காணும் பொருளுரைக்குங் கால். 12

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

கல்லான நெஞ்சே கவலைக் கருத்தாகிப்
பொல்லாப் பவக்கடலில் போகாதே - எல்லாம்
செலக்குமிழி யென்று நினை செம்பொன்னினம்புலத்தை
கலக்கமறப் பார்த்தே கரை. 13

கரைதெரியா இன்பக் கடலில் மூழ்காதே
வரைகடந்த வாழ்வைநந்தி போகாதே - உரையிறந்த
ஓசைவிந்து வைமனமே உற்சபை யாலறிந்து
நேசமுள்ள பாக்கியத்தில் நில். 14

பாக்கியத்தைக் கண்டு பரிந்து மகிழாதே
தாக்குமிடி வந்தால் சலியாதே - நோக்குமே
ஒருவன் திருவிளையாட் டென்று உணரு நெஞ்சே
கருத்தாலே நின்று கருது. 15

கருதாதே மங்கையர் காமவலைக் கேங்கி
உருகாதே நெஞ்சே ஒருவன் - இருகாலை
காத்தயந்து சேர்த்துக் கனலைக்கண் காட்டித்தினகன்
போற்றிப்பார் ஒத்தநல்ல பொன். 16

பொன்னாசை மண்ணாசை பூங்குழல் ராசையெனச்
சொன்னாசை யென்றறிந்து சேராது - எந்நாளும்
ஈசன் அமைத்தபடி யிருக்குங்கா ணிம்மூன்றும்
பாசமது நெஞ்சே பரிந்து. 17

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

பரிந்து திரியாதே பார்வினைக்கும் அஞ்சாதே
அறிந்துருகி சிந்தித் தலையாதே - வருந்தி
நடந்துசித்திர நாடியிலே நாதமறி நெஞ்சே
உடைந்திடு முன்னேயிருந்த உடல். 18

உடம்பழிந்து பின்மனமே ஒன்றுங் கிடையாது
உடம்பழியு முன்கண் டுணராதே - உடம்பிற்
கருநிறத்தைச் சேர்ந்து கருமலச் சிற்றற்றும்
பருகுசித்திரக் கலைமதியும் பார். 19

பாலிக்கும் தோல் தனத்தை பாராதே மங்கையர்கள்
காலிடுக்கைந்தத்திக் கறையாதே - கோல்யெடுத்து
வீர மறலி வருமுன் வினையறுக்கு
பார் விழியினருளைப் பார். 20

பார்த்த இடமெல்லாம் பரமென் றிருமனமே
காற்றனல் மண்நீர் வெளியாம் கண்டதெல்லாம் - மாத்திரண்ட
ஐம்புலனு நில்லாது ஆசைகளும் நில்லாது
செம்புடலும் நில்லாது இனி. 21

இனியசுக ஐம்புலனென்று எண்ணாதே நெஞ்சே
இனியசுக மறவாதே - இனியசுகம்
கண்டதெல்லா மெவ்வுலகு காணாத இவ்வுலகில்
நின்றதோ நில்லாததோ. 22

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

நில்லாமல் ஓடுகின்ற நெஞ்சே நிலையில்லா
மெல்லாப் பகையா யிருக்குங்காண் - பொல்லாக்
கருக்குழியிலே பிறந்த கன்மவினையால்
திருக்கறுக்க வேணும் தினம். 23

தினந்தினைப் போதாகிலுந்தான் தீதறநில் லாமல்
இனம்பிரிந்த மான்போல் இருந்தாய் - தினந்தினமும்
ஓங்காரத் துள்ளொளியை உற்றுணர்ந்து நீமனமே
ஆங்கார அச்ச மற. 24

அச்சத்தால் ஐம்புலனும் ஆங்காரத் தால்மேய்ந்த
அச்சத்தா னிச்சயமாய் கொள்ளதே - மெச்சத்தான்
அண்டமெல்லாம் ஊடுருவ ஆகாச முங்கடந்து
நின்ற நிலைதான் நிலை. 25

நிலையறிந்து நில்லாமல் நீபாவி நெஞ்சே
அலைமதி போலே தினமும் ஆனாய் - கலையறிந்து
மாறனையுங் கூத்தனையும் மாபுறத்தை யம்புதைத்த
வீரனையும் தேட விரும்பு. 26

விரும்பித் தனித்தனியே மெய்யுணராதமாய்கை
இரும்புண்ட நீர்போலே வேரும் - கரும்பதனைத்
தின்றாலல்லோ தெரியும் நெஞ்சே தின் ஐம்புலனை
வென்றாலல்லோ வெளிச்ச மாம். 27

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

வெளிச்சமில்லா வீடே விளக்கே தினவீடே
கழிச்சிறந்த நின்றதைத்தான் கார்நெஞ்சே - வெளிச்சமற
தொண்ணூத்தாறு தத்துவமும் ஒவ்வொன்றாய்த் தோன்றுங்காண்
எண்ணிலிவை காணா திருட்டு. 28

இருட்டனை மாய்கையால் யெவ்வுலகுந் தாயை
பொருட்டெனையே மூடும் ஐம்புலனான் - திருட்டுமன
வண்டருடன் கூடாதே வாழ்மனமே நாமிருவோர்
கண்டுகொள்வோம் காணா ததை. 29

காணாததைக் கண்டதெல்லாங்காணாது
வீணாவல் கொண்டு அகமெலியாதே - நாணாதே
இந்திரியத்தோடு பிணங்காத பாவிநெஞ்சே
செஞ்சொல்மறை அக்கரத்தைத் தேடு. 30

தேடினா லைந்துதிருக்கரத்தைச் சென்றுவெளி
நாடினால் நெஞ்சே நலம்பெறலாம் - வாடியே
பொல்லாப் புவிகாண் போகமதை நம்பாதே
எல்லாம் வெளியில் மஞ்சளே. 31

மஞ்சனைய கூந்தல் மடவாரைக் கண்டுருகும்
பஞ்சமல நெஞ்சே பகரக்கேள் - மஞ்சள்
மயங்காணும் இந்தவுடல் மாயவாழ் வெல்லாம்
அயன் காணழித்த சூத்திரம். 32

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

சூத்திரத்தா லாடும் சுழுமுனையைத் தான்திறந்து
பார்த்திருந்தால் வாராது பாவமெல்லாம் - சூத்திரத்தைப்
பாராமலேயிருந்து பாவிமன மேயிறக்க
வாராம லேயிருக்க வா. 33

வாசிதனைப்பிடித்து வண்கனலோ டேசேர்த்து
சீசீ யெனவே திரியாமல் - மாசி
இருளா னதைச் சேர்த்து இருந்தாயே நெஞ்சே
பொருளா னதைமறந்து போடு. 34

போட்டுவிக்கும் பொல்லாப் புழுச்சொரியு நாய்விடக்கே
கூட்டங் குலைந்து துதித்திடுமுன் - காட்டித்
தாழ்வாராய் நெஞ்சே தராதர மாயெங்கும்
முறவா னதையுயிர்போம் முன். 35

முன்னயனெழுத்தும் மூன்றுவினை கண்டுழன்று
பின்னும் தெரியலையோ பேய்மனமே - தன்னை
அறியாமலே யிருந்தால் அவனறிவானோ மனமே
குறியான புத்தியென்றே கொள். 36

கொள்ளைக்ககப் பட்டுக் குடிகேட ரோடிருந்து
கள்ளக் கருத்தால் கருதாதே - மெள்ளமெள்ள
ஆய்ந்தாய்ந்து பார்த்துநீ ஆராருக் கப்பாலே
தேர்ந்தாய்ந்து பார்த்து தெளி. 37

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

தெளிந்தநீர் பட்டமுதம் சேர்ந்தால் தெளியாதா
தெளிந்தநீர் காட்டா தவைபோல் - தெளிந்தால்
சகல பொருள் தோற்றும் தாழ்வுவரானா மென்றும்
பகலிர வில்லாத பதி. 38

பதிபசுபா சங்களையும் பற்றிதிலே ஊடுருவப்
பதிதனிலே தங்கிப் பவமருந்து - கதிபெறவே
வீணாமோ நெஞ்சேகேள் வேதாந்தத் துட்பொருளை
காணா மலாகுமோ கணக்கு. 39

கணக்கறியா மாயக் கருவிகா ணாதிப்
பிணக்கறியா மற்பேதை நெஞ்சே - இணக்கம்
மறிந்திணங்க வேணும் அருள்வெளியி னுள்ளே
செறிந்துவிந்து நாதத்தைச் சேரு. 40

சேராதே மாய்கைதனை சேர்ந்து கருக்குழியை
பாராதே நெஞ்சே பதையாதே - சீரான
சித்திரத்தைப் பார்த்து தினமனமே சித்திரத்தில்
சத்திரத்தைக் கொள்ளா உகந்து. 41

உகந்து உகந்து நெஞ்சமே ஓரெழுத்தி னாலே
அகந்தனையே சுத்தி பண்ணி யாய்ந்து - முகந்து
குடியாக லாமோ குலவுமல பான
பிடியா னதுதீர வேண்டி. 42

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

வேண்டுந் திரவியமும் மேலுயர்ந்து பள்ளியெல்லாம்
ஆண்ட திரைநாடு மம்மலமும் - மாண்டுபெழிங்
காடுயர்ந்தா ரேமனமே கண்டாயோ மாயநமன்
தேடரிய ஈசன் செயல். 43

செயமகா நெஞ்சே திருட்டுமலக் கோட்டை
பயமறவே வெட்டிப் பரப்பி - நயமான
வாசியினால் சுட்டொடுக்கி மதிமயக்கங் கொண்டிருப்போம்
பேசினோம் பேசா மலே. 44

பேசாத ஞானப் பெருமைக் கிடப்பதுதான்
ஆசாபா சங்களில்லா தார்க்கல்லோ - கூசாமல்
தேசமெல்லாம் ஓடித் திரிகிறாயே மனமே
ஆசாபா சங்களும் நீ யாய். 45

பாசங் களைந்து பதியி லிருந்துகொண்டு
பேசரிய காலைப் பிடித்திருக்க - நேசமுடன்
நாமிருவ ருங்கூடி நாதாந்த ஞானத்தை
தாமொ ருதலையிருக்கத் தங்கு. 46

தங்கு நெடுவளையல் சகலங் களுங்கடந்து
எங்குநான் றான யிருக்காமல் - மங்கு
கருவானாய் நெஞ்சே கரிக்கால தூதன்
வருவானே யென்ன வகை. 47

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

என்னவகை செய்வோம் எமதூதர் வந்தாக்கால்
பின்னையென்ன ஒட்டானே பேய்நெஞ்சே - சொன்ன
படியேகேள் தூதர்களும் பரிந்துவரு முன்னே
அடிதேடிக் கொண்டே அமர். 48

அமரும் மனம்புத்தி யாங்கார மோடுசித்தம்
அமரும் பொழுது வேனோர் - அமரும்
கோவென் றுரைத்தநமன் கொண்டுபோம் போதறிவு
வாவென்றால் நெஞ்சே வராது. 49

வாராது நெஞ்சே வடக்கம் வருமுன்னே
வேறா னதைப்பிடித்து மேலேறி - பாராமல்
பொய்யிலே நில்லாதே புத்திகெடா தேயிருந்தால்
மெய்யிலே நின்றறிவோ மெய். 50

மெய்யாறு வீடுகளாய் மேலாம் படைவீடாய்
ஐயாறு மாதம் பருபத்தாய் - மெய்யாகக்
கண்டதெல்லாம் நான்காண் காணா ததைத்தேடிக்
கண்டுருகி நெஞ்சே கனி. 51

கனியருந்த மாட்டாமல் காயருந்துறாய் மனமே
கனிருசிபோ லாகுமோ காய்தான் - இனியேதுகேள்
நானும் நீயும் கனிகாண் நடுவிருந்தேருசிகாண்
தேனும் பாலும் போல் சிவன். 52

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

சிவதலங்க ளைத்தேடி சீயெழுத்தையூட றுத்து
சிவதலங்க ளைத்தேடி சேராமல் - அபதபங்கள்
பண்ணாதே நெஞ்சேகேள் பாரவினை வந்தாக்கால்
எண்ணாதே அஞ்சாதே யேங்கு. 53

ஏங்காதே நெஞ்சேகேள் எவ்வினைகள் வந்தாலும்
ஏங்காதே சத்தும் விளையாதே - தாங்காமல்
கொண்ட வனும் செத்தவனும் கூட்டத்தானும் வந்தான்
இன்றுகுறித் துண்மையிதென் றெண். 54

என்னரிய நெஞ்சே இனியபால்தன்னை
அன்னந்தண் ணீர்நீக்கி யுண்ணும் - தன்மைபோல்
துன்பங்களைந்து தூயவெளி யூடுவருவா
இன்பங்களை சேர்ந் திரு. 55

சேர்ந்திருவோ ரும்பாலும் தேனும் போலே கலந்து
வாய்ந்ததிலே யுள்ளுரிசை யாகாபல் - போங்காமல்
தத்திமறக் காலன் வருவானே வந்தாக்கால்
ஏத்தப்படுவா னெஞ்சே யெவன். 56

எவனிருந்து நெஞ்சே யெதுப்பாரு முண்டோ
கவனமற நின்று கருதுநல்லால் - புவனமெல்லாம்
வித்துயிரெல் லாங் கழண்டு விண்ணுடைந்த தேமனமே
மற்றுடலையுண்குதே மண். 57

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

மண்ணெழுந்தும் நீரெழுந்தும் வாய்வெழுந்தும் தீயெழுந்தும்
விண்ணெழுந்துங் கூடி ஒரு வீடாகி - நிண்ணரிய
மாயமெல்லா முண்டாக்கி வைத்தான் காண்நெஞ்சேஇக்
காயமெல்லாம் நானானால் கருது. 58

கருவழித்தால் வித்தையில்லா காரணம் போல் நெஞ்சே
கருவழிந்த தெல்லாம் கண்டதெல்லாம் - கருதி
திரியாதே நெஞ்சே சிவன் செயலே யல்லால்
மதியாரில் லாக்கால் வந்து. 59

வந்ததுவும் நாதாந்த வாதனை கண்டே வணங்கித்
தந்திரமாய்ச் சென்று தரியாமல் - அந்தரத்தில்
விட்டபட்டம் போலலைந்து வெவ்வினையி னால்மனமே
தட்டுகெட்டுப் போகாதே தான். 60

தானந் தவமுயற்சி தாடாண்மை யோடுநெஞ்சே
வானம் பிறந்து வழிகூடின் - நானுமதில்
நீயு மொருநிழலில் நின்றங் கிளைப்பாறி
தோயுமதி தானே துடங்கு. 61

துடங்கு மினையறுத்து சுத்தமெல்லாங் கழித்து
அடங்கு மிடத்தில் அடங்காமல் - கிடந்து
பறந்தெடுத்த குஞ்சதுபோல் பதைக்குறாயே மனமே
அறுஞ்சுரப்புமாமிதன் னடியில். 62

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

மதனசரத் தால்மனமே வையகமெல்லா மயக்கி
விதனத் துறக்கமயங்குவதல்லால் வேறில்லை - யதனாலே
சத்துச் சுகத்தை நத்தி தானலைய வேண்டாங்காண்
மெத்தைச் சுகத்தை வெறுத்து. 63

வெறுத்துவெறுத்து கொண்டதுபோல் வீணிலே நெஞ்சே
பொரித்த மக்கினாய்போல் போகாதே - குறிதடுத்து
தேடியே வாசிதனை சேர்ந்து கலந்தபொருள்
கூடினா லாமா குணம். 64

குணங்கள் பலவிதமாய் கொள்ளாதே நெஞ்சே
வணங்குங் குணமாக வந்து - இணங்கியே
மண்டல மெலாங் கடந்து மகாவீட்டைத்திறந்து
கண்டெடுத்துக் கொள்ளவே கனம். 65

கன தனத்து மாதர் கழிகாதல் கொண்டாப்போல்
வினையருப்ப நகைக்குருக வேண்டாமோ - தினமனமே
சோதித்தா னல்லாமல் சுபகா ரியமாக
போதித்தால் கொள்விலையோ புத்தி. 66

புத்திதரும் வித்தைதரும் பொல்லாப் பில்லாமல் நெஞ்சே
சித்திமுத்திபேரின்பம் சேர்ந்திடலாம் - நித்தநித்தம்
தானந்த மானதொரு சற்குருவோடே பழகி
ஆனந்த முண்டிருந்தக் கால். 67

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

கால்வழிச் சென்று கருப்பக் குழிக்கிக்கீழ்
மூலமுற்ற நல்வழியே மூழ்கினறி - மாலை
இருட்டறுத்துப் போடாமல் என்பாவி நெஞ்சே
திருட்டுவித்தை செய்கிறாய் சென்று. 68

சென்று சிவனடியில் சேர்ந்த பெரும்பாம்பு
ஒன்றுமிக வாசியைத்தான் ஓட்டாமல் - நன்றாய்
நிலையாக நில்லாமல் நீயலைகிறாய் மனமே
அலைவாயி னில்துரும்ப தாய். 69

தாய்தந்தை யென்பிள்ளை தானென் றிரங்கிநித்தம்
காய்பறிக்கி றாயே கனியிருக்க - தாய்தந்தை
எத்தனை பேர் பெற்றாரோ என் மனமே நாமுந்தான்
எத்தனை பேரைப்பெற்றோம் இங்கு. 70

இங்குஅங்குமாய் மனமே ஈடழிய வேண்டாங்காண்
அங்கம் பொருளாய் அறிந்துகொண்டு - எங்குமெங்கும்
நாமேசிவமாக நாடினால் ஞானமொழி
தாமே அருளைத் தரும். 71

அருளில்லா தார்க்கு அருளறிவு தங்குமோ
அருளறிவு தானல்லோ ஆனந்தம் - அருளறிவு
தேடுவதுங் கூடுவதும் சிந்தையா னந்தமுடன்
ஆடுவதும் தானறி வினால். 72

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

நாலெழுத்து ஆறு நடுவெழுத்துயீரைந்து
ஓடினால்மூன்றி னொருபதினா லாகுமோ - ஓதாய்நீ
ஓரெழுத்தைக் கண்டுறங்கி உன்னோடுறங்கி நெஞ்சமே
ஓரெழுத்தி லேசென் றுரை. 73

உரைகளத்தினாப் போலே உள்ளமலங்களெல்லாம்
அரைத்துடைத்து நெஞ்சே யருதியிலே - நித்தி
புளியம் பழத்தோடு போலிருக்க வேணும்
உடலழியுங் காலங்க ளுக்கே. 74

காலங் கழித்திடுமுன் கடைவாயில் பாலுறுமுன்
வேலங் கனைய விழிமடவார் - ஏலக்
குழியில்வைத்து மாரடித்து கூப்பிடுமுன் மாய்கை
களையெடுத்துப் போடுமுன் கண்ணால். 75

கண்ணாலே ஞானம் கருதாமல் நெஞ்சேநீ
எண்ணாத மாய்கையெல்லாம் எண்ணுகிறாய் - நன்னாய் கேள்
பார்க்கவேனுந்தனையும் பத்திரை மாத்துத்தங்கம்
ஆக்காமல் போகாதோ உன்னால். 76

உன்னாலே நெஞ்சமே ஊழ்வினை வந்தாலும்
எண்ணானும் பாம்பின்வாய் தேரைபோல் - முன்னாலே
அகப்பட்டுப் போகாதே ஆனந்த மெய்விளங்கு
நம்பித்துணிக்கு முற்றும் நம்பு. 77

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

நம்பினான் றன்னை நடுவணையி லேயிருந்து
கும்பிடா தார்க்குங் குறையுண்டோ - நம்பி
பளிங்கொலிபோல் நெஞ்சே பரந்திடலாமோ யெங்கு
மெழுகனலோ டேசேருமே. 78

ஏமன்வரு முன்நெஞ்சே யிருவினையுமே வென்று
சாம நடுவதன்னில் சார்ந்ததிலேதங்க - மானமுடனே
காலனையும் வென்று சில காமனையும் வென்றுபின்பு,
பாலிக்க லாமதுராம் பார். 79

பாரயனும் மாலும் பரவவரு சுக்கிரனும்
காரனைய வாரணத்தை தான்கண்டு - சீராய்மனமே
நக்கத் திடைநடுவே நற்கனக பொர்பதியில்
சொற்கனகத் தற்பதியில் தோன்றுமே. 80

தோன்றுமே யெல்லாச் சுகமுற்றதில் மனமே
தோன்றுமே ஆனந்தச் சுந்தரியின் - தோன்றுமே
அட்சரச் சுருக்கி னொடும் அக்கரப் பெருக்கமுடன்
உச்சரித்து ரைக்கிறதென்ற உண்மை. 81

உண்மை யிதுகாண்மனமே ஒளியிருந்த வீடதுகாண்
உண்மை சிவனிருக்கும் ஊருகாண் - உண்மை
கருமைதங்கி ஒளியெழுந்து கனத்ததந்தியுன் பாதங்கள்
மருவுதங்கியினி யுகந்த வாறு. 82

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

வருந்தும் பொழுதுகாண் மாயையாய் நெஞ்சே
வருந்தும் குணமாக வந்து - வருந்தும்
இருவினை துடக்கறுத்து யெழுவகைப்பிறப்பறுக்கும்
கருமலத் திருக்கறுங் காண். 83

காண்மனமே சத்திசிவம் ஒன்றான காரணத்தை
காண்மனமே மாலயனுங் காணரிதை - காண்மனமே
செம்பொன் னம்பலத் துள்ளோர் செழுஞ் சொல்லென்று
மன்றிலொன்றும் அம்பலத்தில் ஆடும்நட னம். 84

நடனமது பார்மனமே நயனத் திடைநடுவே
நடனமது நாணம் பதங்காலாம் - நடனம்
பதிமதிவித் தாய் மனமே பலகெதிவித் தாயெனவே
அதிவிதசித் தாந்த மாடும். 85

ஆடும் பதிமனமே அம்பலத்தைச் சுட்டுநடனம்
ஆடும் பரமகுரு ஆனந்தம் - ஆடுகின்ற
கூத்தனை கூற்றிற்று கூத்தபித்த னைத்தசுத்தா
சித்தநித்திரைச் சித்தசித்தி லுத்துநில். 86

நில்லு நிலவறமாய் நேசமுடனே பதியில்
நில்லு பிறவியுற நீநெஞ்சே - நில்லு
கனல்மதியும் தருமிடரும் கதிரெழுத்துங் கலைமதியும்
புனலொடு செஞ்சடைமுடியும் போற்றி. 87

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

போற்றித் தினமனமே பொல்லாக் குலங்கள் விட்டுக்
காத்துக் கனலுங் கருத்துஒன்றாய்ப் - பாத்தறிவால்
சுத்தமல பித்தையத்து சுற்றஒழி சுற்றிலுதித்து
சுற்றமறித்துத்ததிலே தங்கு. 88

தங்குநீ சென்று சதாசிவத்திலே மனமே
மங்குக் கறுக்குழிகள் - வரதங்கும்
கருவும் வினலுங் கதியும் கெதியும்
விதியும் திறுத்தான் வெளி. 89

வெளியில் வெளியாகி விண்ணவன் றால்மனமே
வெளியி லொளியா யிருக்க - வெளியிரவு
கரியுறித்துப் போற்றவனைக் கதிர்மதியைச்சென் றானை
கருவறுத்துப் பார்த்தலே காண். 90

காணு மனமே கரிகாலனை வதைத்துக்
காணு முலகமெல்லாம் காணுருவாய் - தாணுவாய்
மனவிரக மானபுலி மன்றுளன்று நடனமிடும்
னகரத்தின் செயலுற்ற பாதம். 91

பாதத்தான் அஞ்செழுத்தான் பரமபதத்தான் சிங்க
நாதத்தா னென்று நெஞ்சே நன்றாக - போதத்தான்
ஆரணத்தா னோடைந்து அண்டமெல்லாம் சுட்டதிரு
நீரணிந்து கொண்டிருப்போம் நித்தம். 92

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

நித்தனாய் நிர்மலனாய் நின்றுலகம் மூன்றுரைக்கும்
கர்த்தனாய் அஞ்செழுத்தின் காரணமாய்ப் - பெற்ற
குருவினிரு பாதமுனது குளிருமனமுருகி நினை
தருபனதுபற் றனமே தான். 93

தானவனே ஆகாவிட்டால் சண்டாளன் இழுத்தடிப்பான்
தானவனு மங்கே தரிக்கொட்டான் - மாமலையார்
கலங்கும் கல்வியிலே கருத்தித்தான் கொடுப்பான்
முதல்நினைக்கும்படி தேருநெஞ்சே. 94

நெஞ்சே உனக்கு நிலவரமாய்ச் சொன்னதெல்லாம்
நெஞ்சேயென் சொல்லென்று நிகழாதே - நெஞ்சே
கருத்திச்சை பிச்சைதள்ளி கருத்தென்று செப்பித்தாய்
கருத்தக்கோசலத்தள்ளி கருத்துள். 95

உள்ளிருந்து நெஞ்சே உலாவுஞ் சிவகுருவை
வெள்ளெருக்கன் பூச்சூடும் மேனியனை - உள்ளே
மனமுருகப் பார்த்தான் மலைசிலையாய்ச் சென்றானை
உனதறிவால் வார்த்து ஓது. 96

ஓதுநீ நெஞ்சேகேள் ஓரெழுத்து மந்திரத்தால்
ஆதியாய் எங்கும் அமர்ந்தானை - ஓதினால்
கடியகொடு மிடியகலும் கடியகொடு மணியகலும்
கடியவிட்டணுகாமல் காக்கும். 97

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

கார்க்குந் தினமே கடியப் பிறப்பறுத்து
கார்க்கும் பலபிணிநோய் காட்டாமல் - நோக்கும்
அன்றுமிதை பகல்வெளியில் வளறாதமதனை
யுந்தியிலுணர்ந்ததில் வாழ். 98

வாழுநெஞ்சே மயங்கித் திரியாதே
ஏழெழுத்துக் கப்பா லிருப்பானை - ஏழை
வருத்தந்தீர் தனன்பன்மனசந்தில் தங்கி
பரித்தரத்தினக்காரணத்தே பணி. 99

பணிந்து துதிமனமே பல்லுயிர்கட் கெல்லாம்
அணுவிலணு வாக யிருந் தானை - துணிவாய்
பிறவா திருக்கவும் பேரின்ப வாழ்முதலை
திறமாக நம்புநெஞ்சே செலுத்து. 100

ஞானம் - 100 முற்றிற்று

*****

Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com